www.Padasalai.Net www.TrbTnpsc.com

# B இரண்டாம் பருவ பொது தொகுத்தறித் தேர்வு – 2023

## ஏழாம் வகுப்பு

## தமிழ்

நேரம்: 2.00 மணி

மதிப்பெண்கள்:60

**I அனைத்து வினாக்களுக்கும் விடையளி:–**

**(அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 4x1=4

1. தூண் என்னும் பொருள் தரும் சொல் __________
   அ) ஞெகிழி ஆ) சென்னி இ) ஏணி ஈ) மதலை
2. பின்வருவனவற்றுள் ‘மலை’யைக் குறிக்கும் சொல் __________
   அ) வெற்பு ஆ) காடு இ) கழனி ஈ) புவி
3. நகைச்சுவை உணர்வு வெளிப்படுமாறு வரையப்படும் ஓவியம் __________?
   அ) குகை ஓவியம் ஆ) சுவர் ஓவியம் இ) கண்ணாடி ஓவியம் ஈ) கேலிச் சித்திரம்
4. பின்வருவனவற்றுள் விகுதி பெற்ற தொழிற் பெயர் __________?
   அ) எழுது ஆ) பாடு இ) படித்தல் ஈ) நடி

**(ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக:** 2x1=2

5. கல்வியில்லாத நாடு __________ வீடு.
6. வடமொழி தவிர, பிற மொழிகளில் இருந்து வந்து தமிழில் இடம் பெறும் சொற்கள் __________ எனப்படும்.

**(இ) பொருத்துக** 4x1=4

| | | |
|---|---|---|
| 7. எரா | – | திசைகாட்டும் கருவி |
| 8. பருமல் | – | அடிமரம் |
| 9. மீகான் | – | குறுக்கு மரம் |
| 10. காந்த ஊசி | – | கப்பலைச் செலுத்துபவர் |

**II எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி:–** 5x2=10

11. கலங்கரை விளக்கத்தில் எந்த நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்?
12. கப்பலின் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக?
13. பாரதிதாசனின் மனத்தைக் கவர முயன்ற இயற்கைப் பொருள்கள் யாவை?
14. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?
15. ஒரு கலை எப்பொழுது உயிர்ப்புடையதாக அமையும்?
16. குகை ஓவியங்களில் இருந்து நாம் அறியும் செய்திகள் யாவை?
17. இயற்சொல்லின் நான்கு வகைகள் யாவை?

**III எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி :–** 3x4=12

18. கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது?
19. இன்பத்தமிழ்க் கல்வி – பாடலின் மையக் கருத்தை உங்கள் சொந்த நடையில் எழுதுக?
20. கல்வியே அழியாத செல்வம் என்பதை விளக்குக?
21. கேலிச் சித்திரம் என்றால் என்ன?
22. விகாரம் என்பது யாது? எடுத்துக் காட்டுடன் விளக்குக?

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**IV பின்வரும் மனப்பாடப் பகுதியை அடிமாறாமல் எழுதுக.** 4+2=6

23. வானம் ஊன்றிய – எனும் கலங்கரை விளக்கம் பாடலை எழுதுக.
24. அறிவு என முடியும் திருக்குறளை எழுதுக.

**V பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடையளி:–** 10x1=10

25. **பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக.**
    நாங்கள் நேற்று கடற்கரைக்குச் செல்கிறோம்.
26. **குறிப்பு கொண்டு "மா" என்னும் எழுத்தில் தொடங்கும் சொல்லைக் கண்டறிந்து கட்டங்களை நிரப்புக.**
    எழுத்துக்களை ஒலிக்க ஆகும் கால அளவு

| | | | |
|---|---|---|---|
| | | | |

27. **ஓர் எழுத்துச் சொற்களால் நிரப்புக.**
    __________ மணம் வீசும்.
28. **பின்வரும் சொல்லை இருபொருள் தருமாறு தொடரில் அமைத்து எழுதுக.**
    ஆறு
29. **இடைச்சொல் 'ஐ' சேர்த்துத் தொடரை மீண்டும் எழுதுக.**
    புல் தின்றது
30. **கலைச்சொல் எழுதுக.**
    Cartoon
31. **பொருள் எழுதுக** – மழலை
32. ***பிரித்தெழுதுக*** – *எழுத்தென்ப*
33. **தமிழ் எண் கொண்டு எழுதுக.**
    உயிர் எழுத்துக்கள் __________ உம், மெய்யெழுத்துக்கள் __________ உம் சேர்த்து முதலெழுத்துக்கள் __________ ஆகும்.
34. **பொருந்தாத சொல்லை எடுத்து எழுதுக.**
    பகுதி, விகுதி, இடைநிலை, தவ.

**VI ஏதேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளிக்க:** 1x6=6

35. 'ஆழ்கடலின் அடியில்' கதையைச் சுருக்கி எழுதுக.
36. மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.

**VII ஒரு பக்க அளவில் விரிவாக எழுதுக.** 1x6=6

37. உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத் தர வேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

*(அல்லது)*

38. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.
    முன்னுரை – பயணத்தின் தேவை – தரைவழிப் பயணம் – கடல் வழிப் பயணம் – வான் வழிப் பயணம் – முடிவுரை.

***/***

www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com